அவர்கள் அதற்குச் செயலாளராக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மற்றத் துறைகள் எல்லாம் படிப்படியாக நிறைவேற்றப்பட்டுக் கொண்டு வருகின்றன.

### கள்ளக்குறிச்சிக்குக் கலைக்கல்லூரி

*304 வினா—திரு. ந. தருமலிங்கம்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னார்க்காடு மாவட்டத்தில் கள்ளக்குறிச்சியில் ஒரு கலைக் கல்லூரி கட்டும் திட்டம் அரசு பரிசிலனையிலுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. என். தருமலிங்கம்: மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள், அங்கே கலைக் கல்லூரி ஏற்படுத்தும் திட்டம் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் அந்த இடம் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த இடம் என்பதால் இதைப்பற்றி மீண்டும் பரிசிலனைசெய்து அந்தக் கல்லூரியை ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: கள்ளக்குறிச்சிக்குப் பக்கத்திலுள்ள விருத்தாசலத்தில் ஒரு கலைக் கல்லூரி இருக்கிறது. அதுமட்டுமல்ல, ஆத்தூரிலே ஒரு கல்லூரி வந்து இருக்கிறது. கள்ளக்குறிச்சியிலே ஒரு கல்லூரி வரவேண்டுமென்றால் 5 லட்சம் ரூபாய் நன்கொடை அளிக்கப்படவேண்டும், அத்தோடு 40 ஏக்கர் நிலமும் அளிக்கப்படவேண்டும். தென் ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் கல்லூரிகள் பக்கத்திலே பக்கத்திலே அமைந்திருக்கின்ற காரணத்தினால் புதிதாக இப்பொழுது அங்கே ஒரு கலைக் கல்லூரி தேவையில்லை என்ற முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

### புதிய உயர்நிலைப் பள்ளிகள்

*305 வினா—திரு. டி. வி. சம்பத்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராமப்புறங்களில் 5 மைல் சுற்றளவிற்கு ஒரு உயர்நிலைப் பள்ளி இருக்க வேண்டும் என்ற வரம்பு ஏதேனும் உள்ளதா?